Reglestered as as News Paper
பக்கங்கள் 6 விலை ரூபா 5.00

PUBLIC LIBRARY
JAFFNA

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 31 | 13-4-94 | புதன்கிழமை | ஓசை 54

## யாழ். அரச வங்கிகளில் பணத்திற்கு பெரும் தட்டுப்பாடு

யாழ். குடாநாட்டின் அரச வங்கிகளில் திரவநிலைப் பணத்திற்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் வங்கிகளின் வழமையான கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையும் நிலை தோன்றியுள்ளது. வங்கிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பணப் பற்றாக்குறையை நீக்குவதற்கு எடுத்த முயற்சிகள் எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை. கொழும்பில் இருந்து திரவநிலைப் பணத்தை விமான மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான திரு. ஹமில்டன் வணசிங்கவும் ஒப்புதல் அளித்திருந்தார். ஆனால் இதுவரை (5ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவின் புதிய படைப்பிரிவிற்கு 100 ரஷ்ய தயாரிப்பு கவச வாகனங்கள்

## கொள்வனவு குறித்து மொஸ்கோவில் பேச்சு

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்தினரால் புதிதாக உருவாக்கப்படவுள்ள கவசவாகனங்களுடன் கூடிய முன்னிலைப் படைப் பிரிவிற்கு ரஷ்யாவிடமிருந்து நூறு கவசவாகனங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக பேச கடந்த ஞாயிறன்று மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று மாஸ்கோ பயணமானது.

முன்னாள் சோவியத் இராணுவம் உபயோகித்த இராணுவ உபகரணங்களை விற்பனை செய்யும் ரஷ்ய தனியார் நிறுவனமான வியோன்ரெக் நிறுவனமே சிறிலங்கா படைகளுக்கு ஆயுதத்தளபாடங்களை விநியோகிக்க முன்வந்துள்ளது.

மூத்த இராணுவ அதிகாரிகளால் திட்டமிடப்பட்டுள்ள இராணுவ கவசவாகன முன்னிலைப்படைப்பிரிவிற்கு 100 ரஷ்ய கவச பீரங்கி வாகனங்களும், தென்னாபிரிக்காவின் 200 பவள் துருப்புக்காவி கவச வாகனங்களும் தேவைப்படுகிறது. பிரிட்டிஷ் தயாரிப்பு கவச வாகனங்களை கொள்வனவு செய்வது குறித்தும் படையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

தற்போது இராணுவத்திடம் உள்ள கவச போர் வாகனங்களை கரி-55 டாங்கிகளும் சீனாவின் ரி-85 கவச வாகனங்களுமே உள்ளன.

படைமீள அமைத்தல் திட்டத்தின் கீழ் கவசவாகன முன்னிலைப்படையையும் ஆகாய மார்க்க தாக்குதல் முறையையும் விரிவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## உப்புவெளி காவலரண்மீது புலிகள் தாக்குதல்

### ஒரு சிப்பாய் பலி; இருவர் காயம்

உப்புவெளி கும்புறுப்பிட்டி இராணுவ காவலரண் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியாகியதாகவும் மேலும் இருவர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் இத்தாக்குதல் நடைபெற்றதாகத் தெரிவித்த அவ் வட்டாரங்கள் மேலதிக தகவல் எதனையும் வெளியிடவில்லை.

## விஸ்வமடு பகுதியில் விமானங்கள் குண்டுவீச்சு

விஸ்வமடுப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன.

மாலை ஐந்து மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இத்தாக்குதல்களை நடத்தின. தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை தெரியவில்லை.

## கட்டுப்பாட்டு விலையில் நாட்டரிசி விற்காதோர் மீது நடவடிக்கை

### காவல்துறை பொறுப்பாளர் அறிவிப்பு

நாட்டரிசிக்கான கட்டுப்பாட்டுவிலைநிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டுப்பாட்டுவிலையை மீறி விற்பனை செய்பவர்கள் மீது நேற்று முதல் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இது குறித்து காவல்துறை பொறுப்பாளர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார் அதன் விபரம் வருமாறு:

தற்போதைய போராட்ட சூழ்நிலையில் சிங்கள அரசானது தமிழீழ மக்களுக்கெதிராக திட்டமிட்ட முறையில் இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை உலகம் நன்கறியும். இதில் பொருளாதாரத்தடை முக்கியமானதொன்றாகும். இவற்றை முறியடித்து எமது மக்களின் நலனைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எம்மைச் சார்ந்ததாகும். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக எமது மக்களின் அன்றாட முக்கிய உணவுப் பொருட்களில் ஒன்றான அரிசியை சரியான முறையில் கட்டுப்பாட்டு விலையுடன் கிடைப்பதற்கு வழிவகை செய்வதாகும். இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அரிசிக்கு பின்வரும் முறையில் விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது:

(1) ப.நோ.கூ. சங்கங்களில் நாட்டரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 29.00

(2) வெளிச்சந்தையில் நாட் (5ஆம் பக்கம் பார்க்க)

## 256 இலங்கையரை சுவிஸ் திருப்பி அனுப்பும்

(கொழும்பு)

சுவிஸ்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோரித் தங்கியுள்ளவர்களில் 256 இலங்கையர்களை அடுத்தமாதம் திருப்பி யனுப்ப சுவிஸ் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சுவிஸிற்குச் சென்றோரே திருப்பியனுப்பப் படவுள்ளவர்களென சுவிஸ் தூதரகம் அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் சிறிலங்கா அரசும் சுவிஸ் அரசும் செய்துகொண்ட 25000 அகதிகளைத் திருப்பியனுப்பும் உடன்படிக்கையின் கீழ் இவர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இவர் (5ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூடு மீனவர் காயம்

வர் படுகாயமடைந்ததாக வும் சிறிலங்கா பாதுகாப்பு எதனையும் [illegible] வில்லை;

தாக்குதலை மேற்கொண் டன.

ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை தெரியவில்லை;

கும் பாரிய பொறுப்பு எம்மைச் சார்ந்ததாகும்; இதன்

சென்றோரைத் திருப்பியனுப்பப் படவுள்ளவர்களென சுவிஸ்

# கொழும்புக் குண்டு வெடிப்பிற்கு எல்லாளன் படையே காரணம்!

## பி. பி. ஸிக்கு தொலைபேசி மூலம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் கடந்தவார இறுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களுக்கு எல்லாளன் படை என்னும் அமைப்பு உரிமை கோரியுள்ளது. பி. பி. ஸி, ராய்ட்டர் செய்தி ஸ்தாபனங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் இதனைத் தெரிவித்ததாக பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

இதேசமயம் நேற்றுமுன் தினம் 'ஈழப்படை' என்னும் அமைப்பு உரிமை கோரியதாக வேறொரு செய்தி ஸ்தாபனம் அறிவித்திருந்தமை தெரிந்ததே. ஆனால் தற்பொழுதுவரும் செய்திகள் 'எல்லாளன் படை' உரிமை கோரியதாகவே ஊர்ஜிதப் படுத்துகின்றன;

இதுகுறித்து பி. பி. ஸி மேலும் தெரிவிக்கையில்: முன்பின் தெரியாத தமிழ்ப்போராளிக் குழுவைச் சார்ந்தவர் என்று கோரும் ஒருவர், கொழும்பில் வெடித்த குண்டுகளுக்கு உரிமைகோரியுள்ளார் இதுவரை இந்தக்குண்டு புலிகளின் செயல்தான் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது, ஆனால் புலிகளின் மீது கண்டனம் தெரிவிக்காத வகையில் இதைசதிருப்புவதற்காக உருவாக்கப்பட்ட கதை இது என்று பாதுகாப்புப் படையினர் கூறியதாக குறிப்பிட்டது

நாட்டின் இனப் பிரச்சினை தீர்க்கப்படும்வரை மேலும் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் தொலைபேசியில் அழைத்தவர் கூறியதாகவும் இவ்வாண்டு முற்பகுதியில் நாட்டின் நடுப் பகுதிக்கு அருகே பத்துப் பேர் உயிரிழக்கும் வகையில் பஸ் வெடி குண்டு வெடிப்புக்கும் தாமே பொறுப்பு என அந் நபர் கூறினார்.

அதேவேளை வடபகுதி மீது விமானக் குண்டு வீசி அப்பாவி மக்களைக் கொன்றதற்குப் பழிவாங்கும் முகமாகவே அந்த பஸ் வெடிகுண்டு வைக்கப்பட்டதாக தொலைபேசியில் அழைத்தவர் கூறியதாக பி.பி.ஸி மேலும் தெரிவித்தது;

கடந்த பத்தாண்டுக்காலத்தில் எத்தனையோ கொலை

(5ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூடு மீனவர் காயம்

குருநகர் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இச்

(5ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மூடப்பட்டிருக்கும்

நாளை புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களும், மோட்டார் ஊர்திச் செயலகமும் திறக்கப்படமாட்டாது; என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்;

## ஆனையிறவுகாவலரண்மீது புலிகள் தாக்குதல்

### ஒரு சிப்பாய் பலி

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை அன்று தாக்குதல் நடத்தியதாகவும் இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்களை மேற்கோள் காட்டி "ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது;

இதேதினம் புத்தளத்தில் உள்ள எழுவன் குளம் என்னும் இடத்தில் வண்ணாத்திவில்லுவ இராணுவ முகாமில் காலை 3. 30 மணியளவில் குண்டொன்று வெடித்தது; இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் ஒருவர் காயமடைந்தார்;

## ஜொனி கண்ணி வெடியில் இரு சிப்பாய்கள் காலிழப்பு

(கொழும்பு)

மணலாற்றில் அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது இரு இராணுவச் சிப்பாய்கள் "ஜொனி" மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது;

இதில் ஐந்து சிப்பாய்கள் காயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பமைச்சு தெரிவித்திருந்தமை தெரிந்ததே;

## குண்டு வெடிப்புக்கு காரணம் புலிகள் என்பதில் சந்தேகமில்லை

### சிறிலங்கா பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

குண்டுவெடிப்புகளுக்குயார் உரிமை கோரிய போதும் இதனை விடுதலைப் புலிகளே திட்டமிட்டுச் செய்துள்ளனர் என்பதில் எமக்குச் சந்தேகம் இல்லை என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன;

கொழும்பில் கடந்த வெள்ளியன்று இரவும் சனிக்கிழமை காலையிலும் நடைபெற்ற குண்டு வெடிப்பிற்குப் பின்னணியில் விடுதலைப் புலிகளே உள்ளனர்; அவர்களைத்தவிர வேறெவரும் இதனைச் செய்திருக்க முடியாது என மேற்படி வட்டாரங்கள் ஏ எவ், பி. செய்தி நிறுவனத் திற்குத் தெரிவித்துள்ளனர்;

'ஈழப்படை, எனும் அமைப்பு இக் குண்டு வெடிப்புகளுக்கு உரிமை கோரியிருந்தமை தெரிந்ததே;

## குண்டுவெடிப்பை விசாரித்த அதிகாரி விபத்தில் பலி

கொழும்பு குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த இரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் விபத்தில் மரணமானார்;

குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் நோக்குடன் சென்று கொண்டிருந்த இரகசிய

(5ஆம் பக்கம் பார்க்க)

## விசேட படகுச்சேவை

புதுவருடத்தை முன்னிட்டு இன்று கிளாலி-பூநகரி விசேட படகுச் சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

## அருள்தாஸின் காதலியென சிங்களப் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

கல்கிசை கடற்கரைக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவரும் குண்டுவெடிப்பின் சூத்திரதாரி என கருதப்படுபவருமான அல்போன்ஸ் அன்ரன் அருள் தாஸின் காதலி எனக் கருதப்படும் சிங்களப் பெண் ஒருவர் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்;

கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து இவர் தெகிவளையில் வைத்து கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் தொடர்ந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் மேற்படி குண்டு வெடிப்பில் மரணமானவர் தொடர்பான முழு விபரங்களையும் இவரிடமிருந்து பெறமுடியும் எனவும் இவரின் இரகசிய தொடர்புகள், செல்லும் இடங்கள் மற்றும் சந்திக்கும் நபர்போன்ற விபரங்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நம்பப்படுவதாக குற்றப் புலனாய்வு பிரிவு தலைவரும் பொலிஸ் அதிகாரியுமான லயனல் திலக்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## குண்டுவெடிப்பு குறித்து தகவல்கள் கிடைத்தன

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக பல தகவல்களும் தடயங்களும் கிடைத்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்;

சென்ற வெள்ளிக்கிழமை இரவு, மற்றும் சனிக்கிழமை காலை நடைபெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக

(5ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**கோல்டன் கொமட் குஞ்சு விற்பனை**

கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தைமிழக்கு ஒழுங்கைமாவிலிபாய். (8000)

**பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு**

கைலைன் பிறவுன் ஒரு மாதம்வளர்ச்சியடைந்தபேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகாபதி" சந்தை மிழக்கு ஒழுங்கை மாவிலிபாய். (8001)

புத்தாண்டுப் பலன்களும் ராகு, கேது மாற்றமும் ரூ 10/- எங்கும் கிடைக்கும்; ஜெனிரேஷன்; எல்லா ராசிகளும் அடங்கியவை. உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகங்கள் கணித்துக் கொடுக்கப்படும்: T. V. பாலா, சோதிட புத்தக நிலையம், இணுவில். (8017)

**தவறிவிட்டது**

26-03-94 அன்று ஆனைக்கோட்டையில் எனது தேசிய அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் சமாதான காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்; நடராசா கருணாகரன், கனுக்கேணி மிழக்கு, முள்ளியவளை. (8011)

## MATHS CENTRE NELLIADY

### A/L 96

- Physics:- திரு. சூரியநாதன்
  ஆரம்பம : 14-04-94 வியாழன்
  நண்பகல் 12.0
- Chemistry:- திரு. வசீகரன்
- தூய/பிரயோக கணிதம்
  திரு. அருளானந்தம்

நேர அட்டவணை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும். (5879)

## A/L 96

**ஆரம்பமாகிவிட்டது**

பொருளியல்- மகேந்திரன்
கணக்கியல் - சாம்
வர்த்தகம்- தேவா
அளவையியல்- சோதி
தமிழ்- குழந்தை
இந்துநாகரிகம் - அருள்நங்கை
புவியியல்- குணராசா
அரசியல்- கியூபேட்
இந்துசமயம்- அருள்நங்கை -கிரிதரன்
கிறிஸ்தவம்- -அருட்சகோதரர்
வரலாறு- கிரிதரன்
நாடகமும் அரங்கும்- ஜோசேஸ்

விபரங்கட்கு:

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-9120)

# O/L DAY CLASS

ஒழுக்கமான மாணவர் குழுவுடன் உங்களையும் ஒருவராக இணைத்து சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கு

## ஏப்ரல் 15 முதல்

- வாரத்தில் நான்கு நாட்கள் காலை 8.00 — பி. ப 1.00 வரை
- சனி, ஞாயிறு இலவச விசேட கணித பாட செயலமர்வுகள்
- மாதாந்த பரீட்சைகளுடனும் வினா - விடை வகுப்புகளுடனும் 6 மாத துரித மீட்டல் வகுப்பு

**21 வருட கால பெறுபேறுகள் நிகழ்காலத்திற்கு சான்றாகும்**

ESTD:-1973 REGD: No J/7999

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(இ-9099)

யாழ்ப்பாணம்

அத்தியடி பிள்ளையார் கோயில்

## தேர்த்திருவிழா

**14-04-94 (வியாழக்கிழமை)**

காலை: 8.15க்கு வசந்த மண்டப பூசையும் சஞ்சமுகார்ச்சனையும்

காலை: 9.00 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளல்

(இ-9121) - அன்பன்

# களஞ்சியப் பொறுப்பாளர் தேவை

யாழ் நகரிலுள்ள வியாபார நிறுவனமொன்றிற்கு களஞ்சியப் பொறுப்பாளர் உடன் தேவை;

முன் அனுபவம் இருத்தல் வேண்டும்

விண்ணப்ப முடிவுத் திகதி:- 19 - 4 - 1994

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வி. இல. 322, மே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(8007)

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ண வண்ணப் பட்டு, பருத்தி புடவைக்கடல்

கல்யாண முகூர்த்தப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்

## சீமாட்டி புடவை அகம்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (இ 9128)

என்றும் நீங்கள் வியந்திடும் வகையில்

- பூப்புனித நீராட்டு விழா
- திருமண வைபவங்கள்
- பிறந்தநாள் விழாக்கள் என்பவற்றை

சிறந்த நவீன முறையில்

## வெளிப்படப்பிடிப்பை

மேற்கொள்ளவும்

உங்கள் தேவைகளிற்கேற்ற வகையில் சகலவிதமான அளவுகளிலும் கலர், கறுப்பு, வெள்ளை படங்களை உடனுக்குடன் நியாய விலையில் பெற்றுக்கொள்ள கலர் பிலிம் டெவலெப்பிங் Film Developing செய்து பெறவும் என்றும் உங்கள் நினைவில் நிலைத்திருக்க-

## உதயம் ஸ்ருடியோ

அர்ச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

(இ-9103)

# கெயின்ஸ்

கிறிஸ்தவ கல்லூரி முன்பாக கோப்பாய்.

**O/L DAY CLASS** (பகல் நேர வகுப்புக்கள்)

| கணிதம் | விஞ்ஞானம் | சமூகக் கல்வி |
|---|---|---|
| ஜெகன் | V. P. வசந் | கியூபேட் |
| தமிழ் / சமயம் | ஆங்கிலம் | வர்த்தகம் |
| N. K. தரன் | சற்குணராஜா | ஸ்ரீகுமார் |

ஆரம்பம் 15-04-94 (வெள்ளி காலை 8 மணி)

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும் (இ-9115)

## பாரதி

சித்தன்கேணி

**A/L 96** நடை பெறுகின்றது

**கலை - வர்த்தக வகுப்புக்கள்**

பொருளியல் - மகேந்திரன்
கணக்கியல் - D.SAM
வர்த்தகம் - பசில்
அளவையியல் - R.P. சர்மா
தமிழ் - பாலா
அரசியல் - கியூபேட்
இந்துநாகரிகம் - பாலா

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L - 96

மற்றுமோர் புதிய பிரிவு

- பொருளியல் - வரதராஜன்
- அளவையியல் - மனோகரன்

| | |
|---|---|
| கணக்கியல் - செளந்தி | வர்த்தகம் - பசில் |
| தமிழ் - மீரா | இந்துநாகரிகம் - பாலா |
| புவியியல் - சேரன் | அரசியல் - பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவம் - நிரஞ்சன் | இந்துசமயம் - தாஸ் |

நாடகமும் அரங்கியலும்
சிவா

ஆரம்பம் 16-04-94 சனி 7.00 மணி

- முதலாவது பிரிவுக்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
- வேறு பிரிவுகள் எதுவும் ஆரம்பிக்கப்படமாட்டாது.

(இ-9095)



| | |
|---|---|
| அரசியல் | - ரூபேட் |
| இந்துநாகரிகம் | - பாலா |
| புவியியல் | - மோசேஸ் |
| இந்துசமயம் | - கிரிதரன் |

விஞ்ஞான வகுப்புக்கள்

| | |
|---|---|
| CHEMISTRY | - சிவசோதி |
| PHYSICS | - ரூபநாதன் |
| PURE APPLIED | - துரையப்பா |
| ZOOLOGY | - சுரேஸ் |
| BOTANY | - பிரபல ஆசிரியர் |

புதிய அனுமதிகள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

O/L DAY CLASSES
ஆரம்பமாகிவிட்டது
அனுமதிகளை
பெற்றுக்கொள்ளலாம்

(இ-9116)



புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

புத்தாண்டில் பெருவாழ்வு வாழ
எம் இனிய நல்வாழ்த்துக்கள்

# கோல்டன்
# (!)பிறெசியர்ஸ்(!)

எங்கும் கிடைக்கும் உன்னத தயாரிப்பு!

என்றும்
நீண்டகால உபயோகத்திற்கு

வாங்கிப் பயன் அடைவீர்!!

கோல்டன் பிறெசியர்ஸ்

(சி-9.22)


## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-13

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-
**குலம்** (வீரகுட்டி சந்திரமோகன் - இருதயபுரம்-மட்டு)

1987ஆம் ஆண்டு மட்டு - கல்குடாச்சந்தியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வயிற்றில் வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-
**சுதர்சன்** (கிருஷ்ணபிள்ளை - கிருஷ்ணகுமார் பேத்தாழை-மட்டு)

1988ஆம் ஆண்டு மட்டு- புதுக்குடியிருப்பில் தேசவிரோதசக்திகளினால் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-
**ஈஸ்வரன்** (தம்பிராசா ஆழ்வாப்போடி - புதுக்குடியிருப்பு - 05 - மட்டு)

1989ஆம் ஆண்டு மட்டு - கல்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**குமார்** (கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் - கல்குடா மட்டு)

தென்மராட்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-
**ஜீவா** (சின்னத்துரை இந்திரன் - மீனாட்சி அம்மன்கோவிலடி, சங்கத்தானை- சாவகச்சேரி)

1991ஆம் ஆண்டு கிளி- ஆனையிறவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-
**வள்ளல்** (செல்லநாயகம் விஜயகுமார் - இல. 60, பாண்டியன்குளம், வவுனிக்குளம்)

1993ஆம் ஆண்டு யாழ்- கிளாலி பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-
**2-ம் லெப். சங்கிலி** (அப்புத்துரை உதயதாசன் சனின தெற்கு, புன்னாலைக்கட்டுவன்-யாழ்)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-9118)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த

PUBLIC LIBRARY JAFFNA.

# புதுவருட வாழ்த்துக்கள்


தரம்மிக்க திருமண பட்டுப் பிடவைகளுக்கும்
உயர்ரக கூறைப் பிடவைகளுக்கும்
தலைநகரில் சிறந்த ஸ்தாபனம்

சுகுணாஸ் புடவை மாளிகை
29, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்

கிருஷிகா ஆடை அகம்
69A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
(இ-9102)



மலரும் புத்தாண்டு பூத்துக்குலுங்க
எம் இனிய வாழ்த்துக்கள்.

உங்கள் தேவை அறிந்து
கண்கவர் வர்ண ஆடைகளை
புதுப்புது டிசைன்களில்
நீங்கள் தெரிவு செய்திட

சிறி நந்தி ஆடை அகம்
இல 3, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
(இ-9104)



எவர்சில்வர் பிளாஸ்ரிக்
அலுமினிய
அன்பளிப்பு பொருட்களை
தெரிவு செய்து பெற்றிட

செல்லா சன்ஸ் சேல்ஸ் சென்ரர்
118, 198, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-9101)



உதயன்ஸ் வோச் வேக்ஸ்

நீங்கள் வியந்திடும் வகையில்-
சகல வகையான மணிக்கூடுகளை சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக் கொள்ளவும்
சகலவகையான எலெக்ரோனிக் கல்குலேற்றர்களை சிறந்த முறையில் திருத்திப் பெற்றிடவும்
மேலும்
உங்கள் மணிக்கூடுகளுக்கான சகல பற்றரிகளையும்
நீங்கள் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

உதயன்ஸ் வோச் வேக்ஸ்
இல 100, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
(இ-9108)



உங்கள் அழகினை மேலும் மெருகூட்ட தேவையான
★ அழகுசாதன பொருட்கள் ★ பாடசாலை உபகரணங்கள்
★ சகல வகையான பாக் வகைகள்
★ றேடியோ, மணிக்கூடு, எலக்றோனிக் பொருட்கள்
★ சகல வகையான எவர்சில்வர் பாத்திர வகைகளை
விரும்பிய வகையில்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
தெரிவுசெய்து பெற்றிட

(அழகுப் பொருட்களின் பொற்கோயில்)
அழகியல் அழகுசாதன மாளிகை
இல. 17, பெரியகடை வீதி, (இ-9105) யாழ்ப்பாணம்



பூக்கண்ணாடி வகைகள் — ஒரு நூல் கண்ணாடிகள்
கால்(1\4)இஞ்சி கண்ணாடிகள் — சூட்கேஸ் வகைகள்
மற்றும்
முகம் பார்க்கும் 48 x 14 அளவுகளிலுள்ள எல்லா வகையான கண்ணாடிகளுக்கும்



உங்கள் சைக்கிள் தேவைகளைப் பூர்த்திசெய்யவும்
பலதரப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள்

❋ முகம் பார்க்கும் 48 x 14 அளவுகளிலுள்ள எல்லா வகையான கண்ணாடிகளுக்கும்,

❋ எல்லா வகையான படங்களுக்கும் சட்டம் போட்டு கொடுக்கவும்

↓

## இராஜேந்திரா வர்த்தக நிலையம்

இல. 192, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

(சி-9107)



❋ தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் சோடனை நகைகள்

❋ சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்

❋ வெளிநாட்டு, உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## M

அழகு சிற்பங்களின் வண்ண மாடம்

## ஜெயா

அழகுசாதன மாளிகை

177A, மின் நிலைய வீதி,
160, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்

## ரேகா

அழகுசாதன விற்பனை நிலையம்

25, 48, பெரியகடை
யாழ்ப்பாணம்

(சி-9106)



❋ பலதரப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள்

மற்றும்

❋ பல வாணிபப் பொருட்களையும்





## மொத்தமாகவும், சில்லறையாகவும்

நீங்கள் பெற்றிட

↓

## E. S. பேரம்பலம் அன் கோ

50, கஸ்தூரியார் வீதி, (சி 9125) யாழ்ப்பாணம்.

# மதுரமான இரவு

மகத்தான புடைவைத் தெரிவுகளை மலிவான விலையில் யாழ் வாழ் மக்களுக்கு வழங்கி வசதி செய்யும் "மதுரா பட்டு மகால்" ஸ்தாபனத்தாரின்

## கலை நிகழ்வுகள்

- நாதஸ்வர தவில் மேதைகளின் நாதஸ்வர தவில் கச்சேரி
- நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சி
- கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "சந்தனக்காடு" நாடகம்
- தமிழீழத்தில் பிரபல்யமான இசைக்குழுவினரான இராஜன் இசைக்குழுவினரின் இன்னிசை விருந்து

### பரிசுக் குலுக்கல்

இடம்: இளங்கலைஞர் மன்றம்

காலம்: 20-04-1994 மாலை

பிரவேசம்: இலவசம்

**குறிப்பு:** மதுரா பட்டு மகால் 75, பெரியகடை யாழ்ப்பாணம் நிறுவனத்தில் 13-04-1994 வரை புடைவை வாங்கும் சிட்டை இலக்கங்கள் யாவும் 20-04-1994 பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் புத்தாண்டுக்கான உங்கள் புடைவைத் தெரிவுகளை மதுரா பட்டுமகாலில் தெரிவாக்கு

13-04-1994 வரை புடைவை வாங்கும் சிட்டை இலக்கங்கள் யாவும் 20-04-1994 ஜரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் புத்தாண்டுக்கான உங்கள் புடைவைத் தெரிவுகளை மதுரா பட்டுமகாலில் தெரிவாக்கு வதன் மூலம் மேலும் சிட்டை (Bill) களை சேகரித்து அதிர்ஷ்டசாலியாகும் சந்தர்ப்பத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

**1ஆம் பரிசு தங்கப்பதக்கம்** **2ஆம் பரிசு 5000.00**

**3ஆம் பரிசு 2500.00** **பல ஆறுதல் பரிசுகள்**

---

**ஓராண்டு காலமாய் ஒய்யார நடை போடும் மதுரா பட்டு மகாலின் மகிமை மேலும் மலர வாழ்த்துகின்றோம்**

**ருஜன் எரிபொருள் விற்பனை நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி,

**இராசையா மருந்துக்களஞ்சியம்**
(பல்பொருள் அங்காடி)
பலாலி வீதி, திருநெல்வேலி.

**கணேசன் களஞ்சியம்**
(சந்தை உப்புறம்)
திருநெல்வேலி,

**சைமன் வர்த்தக நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**கலர பல்பொருள் அங்காடி**
பலாலி வீதி, திருநெல்வேலி

**அம்பாள் வர்த்தக நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி

**அருள் வர்த்தக நிலையம்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

**ருஜன் களஞ்சியம்**
சந்தை உப்புறம்
திருநெல்வேலி.

**கிருஷிகா ஆடை அகம்**
69 A, நவீன சந்தை (உப்புறம்)
யாழ்ப்பாணம்,

**ருஜன் களஞ்சியம்**
யாழ் வீதி, கச்சேரி முன்பாக, இவிநொச்சி

(89149)

PUBLIC LIB. JAFFNA.

சிந்தனைக்கு

அனுபவம் என்பது அதிக பணம் செலவாகும் பள்ளி; ஆயினும் அறிவிலிகள் வேறு பள்ளியில் பயிலமாட்டார்கள்.

— பெஞ்சமன்

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 023 - 2839 நிர்வாக பீடம் 2028
தபால் பெட்டி எண் 05

## ராணுவ கட்டமைப்பிற்கு வலுவூட்டும் முயற்சி

சிறிலங்கா அரசு ஆயுதப் படைகளை மீளமைக்கும் பாரிய திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகின்றது. இதன் பிரகாரம் இராணுவக் கட்டளையிடும் கட்டுப்படுத்தும் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களைச் செய்ய முன்வந்துள்ளதோடு, இராணுவத்தினரின் தொகையை அதிகரிக்கும் நடவடிக்கையிலும், ஆயுத தளபாடங்களை நவீனப்படுத்தும் நடவடிக்கையிலும் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

இம் மீளமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, இராணுவக் கட்டளையிடும் அமைப்பை விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படத் தொடங்கியுள்ளன. இதன் ஓர் அங்கமாகவே இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி சில்வா ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டமையாகும். அத்தோடு, சிறிலங்கா இராணுவத்தில் லெப். ஜெனரல் தரத்திற்கு மூவரும், மேஜர் ஜெனரல் தரத்திற்கு மேலும் ஐவரும் நியமனம் பெறவுள்ளனர்.

அதாவது, லெப். ஜெனரல் தரத்தில் இருந்த இராணுவத் தலைமை தற்பொழுது ஜெனரல் ஒருவரின் தலைமையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு இதுவரை மேஜர் ஜெனரல்களிடம் இருந்த அதிகாரிகள் நிலைத் தலைவர் பதவி உட்பட பிராந்தியத் தளபதி தலைமையும் -குறிப்பாக போர் இடம்பெற்றுவரும் வடக்கு - கிழக்கு - லெப். ஜெனரல்கள் வசம் செல்லவுள்ளன. இதேவேளை, மேலும் ஐந்து மேஜர் ஜெனரல்கள் நியமனமானது மேஜர் ஜெனரல்களின் தொகையையும் இரட்டிப்பாக்கியுள்ளது.

இராணுவ கட்டளையிடும் - கட்டுப்படுத்தும் அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள இம் மாற்றமானது சிறிலங்கா இராணுவத்தின் தலைமைப் பீடத்தைப் பலப்படுத்தும் நோக்கத்துடனும், போர் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் குறிக்கோளுடனும் கடந்த காலப் பாடங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டவை என்றே கொள்ள முடியும்.

ஈழப்போர் இரண்டில், விடுதலைப் புலிகளுடனான போரில் சிறிலங்கா இராணுவம் பெரும் உயிரிழப்புக்களையும், தளபாட இழப்புக்களையும் சந்தித்தது மட்டு...

## கைதான மகனை மீட்க வந்த வயோதிபத் தம்பதியும் கைது

### எதிர்த்து மனுத் தாக்கல்

(கொழும்பு)

மகன் கைது செய்யப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டு அவரைப் பார்க்க கொழும்பு வந்த போது கைது செய்யப்பட்ட வயோதிபத் தம்பதியர் தங்கள் விடுதலை கோரி உயர் நீதிமன்றில் உரிமை மீறல் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

கொக்கட்டிச் சோலை மயிலடித் தீவு மட்டு நகரைச் சேர்ந்த எட்டுப் பிள்ளைகளின் தந்தையான அமரிபோடி நாகநாதபோடி (80) என்பவரே தமது விடுதலை கோரி மனித உரிமை நிலையம் ஊடாக உயர் நீதிமன்றில் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார்.

தற்போது களுத்துறை சிறையில் உள்ள நாகநாதப்போடி தமது மனுவில் பாதுகாப்பு இணைப்புப் பிரிவு இயக்குனர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், களுத்துறை சிறை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

1.11.93 இல் எனது மகன் கைது செய்யப்பட்டதாக அறிந்து எனது 75 வயது மனைவியுடன் அறுவாக்காடு மலைசேகரா மாவத்தையில் உள்ள பாதுகாப்பு இணைப்புப் பிரிவு அலுவலகத்திற்கு 23.11.93 இல் சென்றேன். தீவிரவாதிகளுடனான மகனின் தொடர்பு பற்றி கேட்ட பொலிசார் என்னையும், மனைவியையும் அன்று முதல் தடுத்து வைத்திருக்கின்றனர்.

முதலில் மகஸீன் சிறையிலும் பின்னர் களுத்துறை சிறையிலும் என்னை வைத்துள்ளனர். எனது மகனும் இச் சிறையில் தான் இருக்கிறார். எனது மனைவியை வெலிக்கடை சிறையில் மகளிர் பிரிவில் வைத்திருக்கின்றனர்.

நான் ஊன்று கோலின் உதவியுடன் நடப்பவன். காது அவ்வளவாக கேட்காது. நான் எந்த குற்றமும் புரியவில்லை. என் கைதிற்கு காரணம் கூறவில்லை. நீதிமன்றிலும் ஆஜர் செய்யவில்லை. எனது கைதும் தடுத்து வைப்பும் சட்ட விரோதமானது. என்னை விடுதலை செய்ய வேண்டும் என அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## பண மோசடி குற்றம் நபர் காவல்துறையால் கைது

(மல்லாகம்)

நீதிமன்றத்தைக் காரணம் காட்டி சட்டவிரோதமாகப் பணம் பறித்த நபரொருவர் சுன்னாகம் காவல்துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

கசிப்பு உற்பத்தி செய்தமைக்காக, ரூபா 8000 உம் ஒரு மாத தண்டனையும் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட இணுவிலைச் சேர்ந்த பெண்ணொருவரிடம், விடுதலை பெற்றுத் தருவதாக கூறி ரூபா 500 ஐப் பெற்றுக் கொண்ட இந்நபர், நீதிமன்றப் பற்றுச்சீட்டில் ரூபா 150 ஐயே கட்டப்பட்டுள்ளதை காட்டிய போது, மிகுதிக் காசும் நீதிமன்றத்துக்கே செலுத்தப்பட்டதாக கூறி அபகரித்தார். பின் தண்டனை அறிவிக்கப்பட்டதும், மேலும் 200 ரூபாவை அப்பெண்ணிடமிருந்து பெற்றுள்ளார். இச்சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக கந்தையா சர்வேந்திரன் என்பவரே, நீதிமன்று காவல்துறை அலுவலரால் கைது செய்யப்பட்டு, சுன்னாகம் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (09)

## பருத்தித்துறை நோக்கி வந்த றுகுணு மீள அழைக்கப்பட்டது

(வடமராட்சி)

கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை துறைமுகம் நோக்கிப் புறப்பட்ட 'றுகுணு' கப்பல் மட்டக்களப்பு பகுதியில் வைத்து கடற்படையினரால் திருப்பி அழைக்கப்பட்டு கொழும்பு துறைமுகத்தில் வைத்து மீண்டும் சோதனையிடப்பட்டு வருகின்றது.

இக்கப்பலில் உரவகைகளும், தனியாருக்கான பொருள்களும் எடுத்துவரப்பட்டிருந்தன. முதலில் சோதனையிடப்பட்டு பருத்தித்துறை துறைமுகம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட இக்கப்பல் மீது சந்தேகம் ஏற்பட்டதையடுத்து மீண்டும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கடற்பகுதியில் வைத்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இக்கப்பல் தற்போது துறைமுகத்தில் வைத்து சோதனையிடப்பட்டு வருகின்றது.

அதேசமயம் மண்ணெய், தேங்காய் எண்ணெய் வகைகளுடன் புறப்படும் 'மாகோ' கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளது. அன்றைய தினம் புத்தாண்டாக இருப்பதினால் தொழிலாளர்கள் லீவில் நிற்பதையடுத்து மறுநாள் பரல்கள் இறக்கும் வேலைகள் நடைபெறும். பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்று பொருள்களை இறக்கும் கோமாரி கப்பல் 16ஆம் திகதி கொழும்பு நோக்கிப் புறப்படும். (யோ)

### குண்டுவெடிப்பை

பொலிஸ் அதிகாரியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லியன கமகே வாகன விபத்தில் காயமடைந்துள்ளதாக...

## விசர்நாய்க் கடியினால் 7 வருடங்களின்பின் மரணம்

(யாழ்ப்பாணம்)

பத்து வயதில் நாய் கடித்ததாக கூறப்படும் 17 வயது யுவதி ஒருவர் விசர்நாய்க் கடியால் ஏற்படும் றேபிஸ் (வயது 17) என்பவரே றேபிஸ் நோய்க்கிலக்காகி மரணமடைந்தவராவார்.

மார்பு வலியென யாழ். போதனா மருத்துவமனைக்கு...

## மாநில அரசை மத்திய அரசு கலைக்க சதி செய்கிறது

### -முதலமைச்சர் ஜெயலலிதா

தமிழக சட்டப்பேரவையில் நேற்று முதலமைச்சர் ஜெயலலிதா மாநில அரசை மத்திய அரசு கலைக்க முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியதை யடுத்து எதிர்க்கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் பலத்த அமளிகளின் மத்தியில் சட்டசபையிலிருந்து வெளியேறினர்.

நேற்று முன்தினம் திருச்சி அருகே பயணிகள் பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவர முயற்சித்த போது பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, அண்மைய வீதிக் கொள்ளைகள் அரசை குலைக்க சிலரின் சதி நடவடிக்கையே என்றார். இதை காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சேபித்தனர். இதையடுத்து சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இந்நிலையில் பேச முயன்ற காங்கிரஸ் உறுப்பினர் பீற்றர் அல்போன்ஸ் சபைத் தலைவரால் வெளியேறப் பணிக்கப்பட்டார். இதையடுத்து காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர். தி. மு. க உறுப்பினர் பரிதி இளம்வழுதியும் சபை காவலரால் வெளியேற்றப் பட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முதலமைச்சர் பிரதமர் நரசிம்மராவ், ராஜீவ் காந்தி ஆகியோர் மீது அவதூறாக பேசியதை யடுத்து தாம் சபையிலிருந்து வெளியேறியதாக குறிப்பிட்டார்.

பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட தி. மு. க. உறுப்பினர் பரிதி இளம்வழுதி பேரவையின் வளாகத்தில் உட்கார்ந்து மறியல் செய்தார். பின் அவரை காவலர்கள் தூக்கிச்சென்று பேரவை நுழைவாயிலில் விட்டனர். அவர் அங்கிருந்தும் மறியல் செய்யமுயன்றார். எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கேட்டுக் கொண்டதையடுத்து அவர் தனது போராட்டத்தை கைவிட்டார்.

## நிர்வாகசேவை பரீட்சையில் மூவர் மட்டுமே சித்தி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் (எஸ். எல். ஏ. எஸ்) வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூவர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

ஐம்பதுக்கு மேற்பட்டோர் இம் மாகாணங்களிலிருந்து தோற்றிய போதும் யாழ்ப்பாண செயலக புனர்வாழ்வுப் பிரிவைச் சேர்ந்த செல்வி ஆர். எஸ். துரைராஜா, மன்னார் செயலகத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தன், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஈஸ்வரராகவன் ஆகியோர் மட்டுமே பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை எழுதுவினைஞர் சேவையின் 'சுப்ரா' தரத்தில் இருபத்தாறு பேரும், மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு நிர்வாக சேவை பரீட்சையில் 15 பேரும் சித்தியடைந்துள்ளதாக தெரியவருகின்றது. (நி)

## ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலை அருகே இனம் தெரியாதோர் சூடு; ஒருவர் பலியானார்

ஸ்ரீகோட்டவெல ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகம் அருகே நடைபெற்றதுப்பாக்கி பிரயோகம் ஒன்றின் போது ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இனம் தெரியாத துப்பாக்கி நபரினால் மேற்கொள்ளப்பட்ட இத் துப்பாக்கி பிரயோகத்தினால் இவர் பலியானதாகவும் பலியானவர் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லையெனவும் தெரிய வருகிறது.

## புலிகளாலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

னையும், தளபாட இழப்புக்களையும் சந்தித்தது மட்டுமல்ல, அதன் இராணுவக் கட்டமைப்பும் அதன் கட்டளையிடும் தலைமைப்பீடமும் சிதைந்ததெனலாம்.

அதிலும் குறிப்பாக 1992ஆம் 1993ஆம் ஆண்டுகளில் இராணுவக் கட்டமைப்பின் தலைமைப் பீடத்தில் நிரப்ப முடியாத வெற்றிடங்களை புலிகளின் தாக்குதல்கள் ஏற்படுத்தின. லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர்ஜெனரல்விஜயவிமலரெக்னாஉட்படஒன்பதுஉயர்நிலை அதிகாரிகள் கொல்லப்பட்டமை வடபகுதி இராணுவக் கட்டளையிடும் - கட்டுப்படுத்தும் தலைமைப் பீடத்தை மட்டுமல்ல, சிறிலங்காவின் முன்னணித் தளபதிகளையே இல்லாது ஒழித்ததெனலாம். இதேபோன்று, பூநகரியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது சிறிலங்கா இராணுவத் தளபதியையே பதவியிலிருந்து வெளியேற்றியது பல தளபதிகளின் திறமை குறித்துக் கேள்வியை எழுப்பியது.

இவ்வாறாக உருவாகிய நெருக்கடிகளின்போது சிறிய எண்ணிக்கையைக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத் தலைமை பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தது. உடன் நிரப்ப முடியாத வெற்றிடங்கள் ஏற்பட்டதினால் இறுகிப் போனது. இந்நிலையை நிவர்த்திக்கும் முகமாகவே இராணுவத் தலைமைப் பீடம் இன்று விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏற்படும் வெற்றிடங்களை உடன் நிரப்ப முடியும் என சிறிலங்கா அரசு எண்ணுகின்றது.

இதேவேளை, கடந்த காலப்போர் அனுபவங்களின்படி பிரசந்தியக் கட்டளைமையங்களையும் பலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இராணுவ வட்டாரங்களில் எழுப்பியது. அவ்வாறு பலப்படுத்தப்படும் பட்சத்திலேயே களநிலைக்கு ஏற்ப அவசர முடிவுகளை எடுக்கவும், போரை வழிநடத்திச் செல்லவும் இலகுவாக இருக்கும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் இராணுவக் கட்டமைப்பில் தற்பொழுது செய்யப்பட்டுள்ள மாற்றம் சாதகமாக அமையும் என்றே கருதப்படுகின்றது.

அதாவது, சிறிலங்கா அரசாங்கம் சிதைந்து போயிருந்த இராணுவக் கட்டமைப்பை மீள் ஒழுங்கமைப்புச் செய்து போரைத் தொடர்ந்து நடத்தும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. ஆனால், போரில் சிறிலங்கா இராணுவம் சந்தித்த தோல்விகள் இராணுவக் கட்டமைப்பில் இருந்த தவற்றினால் அல்ல; விடுதலைப் புலிகளின் திறமை வாய்ந்த போர்யுக்தியினால் என்பதைச் சிறிலங்கா அரசு மறந்து செயற்படுவதுதான் இதில் வேடிக்கையானது.

திக் மரணமடைந்துள்ளதாக 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காலி வீதி வழியாக சென்றுகொண்டிருந்த போது கல்கிசை சந்திக்கு அருகே ஏற்பட்ட வாகன விபத்தில் இவர் மரணமடைந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு

களும், குண்டு வெடிப்புகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றிற்கான பழி புலிகளின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் புலிகள் எதற்கும் இதுவரை பொறுப்பேற்றது கிடையாது. சர்வதேச சமூகத்தின் வெறுப்பைச் சம்பாதிக்கக் கூடாது என்பதாலேயே இந்த உத்தி கையாளப்படுகிறது. அண்மையில் நடந்த தாக்குதல்கள் உல்லாசப் பயணத் துறையைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்டன. இதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று பாரிஸ் நகரில் உள்ள புலிகளின் பேச்சாளர் கூறியிருக்கிறார். ஆனால் கொழும்பில் உள்ள அரசியல் வட்டாரத்தினர் இதை நம்பவில்லை என்றே கூறலாம் இவ்வாறு பி.பி.ஸி தெரிவித்தது.

## யாழ். அரச

மேற்படி நடவடிக்கை மூலம் கொழும்பில் இருந்து பணம் எடுத்துவரப்படவில்லை.

வங்கிகளில் பணப்பற்றாக்குறை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. அத்துடன் வழக்கம்போல புத்தாண்டை முன்னிட்டு புதிய பணநோட்டுக்களும் எடுத்துவரப்படவில்லை.

இதனால் புதுவருட தினத்தன்று வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கான விசேடக் கொடுப்பனவுகள் செய்ய முடியாத நிலை உருவாகியிருப்பதாகவும் தெரியவருகிறது.

கடியால் ஏற்படும் றேபிஸ் நோய்க்கிலக்காகி மரணமான சம்பவமொன்று யாழ். போதனா மருத்துவமனையில் நடந்துள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த செல்வராணி கந்தசாமி

## 256 இலங்கையர்

கள் சாதாரண பயணிகள் போன்று ஐந்து, பத்துப் பேராக திருப்பியனுப்பப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த இவர்களுக்கு அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் தூதரகம் உதவுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## துப்பாக்கி

சம்பவத்தின்போது சாவற் காடு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவாப் சுந்தர் (வயது-18) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார். (ச, சி)

## கட்டுப்பாட்டு

டரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 29. 50

மேற்படி விலைக்கு மேற்படாது நாட்டரிசியை எமது மக்களுக்கு சில்லறையாக விற்பனை செய்யுமாறு சகல வர்த்தகர்களையும் தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கூறிய கட்டுப்பாட்டு விலைகளைக் கருத்திற்கொண்டு நாட்டரிசியை கொள்வனவு செய்யுமாறு எமது மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். இவ் விதிமுறைகளை மீறும் வர்த்தகர்கள் மீது காவல்துறையினர் நேரடி நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

போதனா மருத்துவமனைக்கு சிகிச்சை பெறவந்த இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டபோதே இவருக்கு மார்புவலியல்ல விசர்நாயால் கடியுண்டவர்களுக்கு ஏற்படும் நீர்வெறுப்பு நோய் (றேபிஸ்) தான் ஏற்பட்டுள்ளதென தெரியவந்துள்ளது.

இதுபற்றி விசாரித்தபோது இறந்தவருக்கு 17 வருடங்களுக்கு முன்னர் நாய் கடித்ததெனவும், அப்போது அது விசர்நாய்தான் என அறியாததால் சாதாரணமாக நாய் கடித்தால் பெறும் சிகிச்சையே அளிக்கப்பட்டதெனவும் பின்னர் ஒருமுறை வளர்ப்புப் பூனை நகத்தால் கீறியதெனவும் தெரியவருகின்றது. (கி)

## சந்திரசேகரன் பதவி ஏற்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பீ. சந்திரசேகரன் மாகாணசபை உறுப்பினராக நேற்று முன்தினம் பதவி ஏற்றார் மத்திய மாகாணசபைக்கு தெரிவான அவர் 1991 இல் நடைபெற்ற கூட்டுப்படை தலைமையக குண்டு வெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

## குண்டு

வும் இது குறித்துக் கிடைத்த தடயங்களைக் கொண்டு பல கோணங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எனவே மேலும் இது தொடர்பான தகவல்கள் கிடைக்கும் எனத் தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

## மேற்கொள்ளப்பட்டது

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு விடுதலைப் புலிகளாலேயே மேற் கொள்ளப்பட்டது எனவும் அதன் தலைவர் வே. பிரபாகரன் நேரடித்திட்டம் மூலமே நிறைவேற்றப்பட்டது எனவும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. உல்லாசப் பயணத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதே புலிகளின் திட்டம் எனவும் அவ் வட்டாரங்கள் கூறின.

இதேவேளை குண்டுவெடிப்புக்கு காரணமான பலர் பொலிசாரின் சுற்றிவளைப்புக்குள் சிக்கியிருப்பதாகவும் விரைவில் இவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் 'லங்கா புவத்' தெரிவித்தது.

## தபாலில்பொதிகள் அனுப்ப புதிய நடைமுறைகள்

(கொழும்பு)

தபால் மூலம் பொதிகளை அனுப்புவது தொடர்பாக புதிய நடைமுறையொன்றை தபால் திணைக்களம் நடைமுறைப்படுத்தப்போவதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பொதிகளை அனுப்புபவர்கள் தம்முடன் தேசிய அடையாள அட்டைகளைக் கொண்டு வரவேண்டுமென்றும் பொதியின் வலது மேல் மூலையில் தேசிய அடையாள அட்டையின் இலக்கம் குறிப்பிடவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. அப்படி இல்லாதுவிட்டால் அப்பொதியை ஏற்றுக் கொள்ளக்கூடாது என சகல தபால் அலுவலகங்களுக்கும் தாம் பணித்துள்ளதாக தெரிவித்தார். இதேவேளை வடபகுதிக்கு எக்காரணம்கொண்டும் பொதிகள் ஏற்கப்படக்கூடாது என்றும் இதேவேளை வடபகுதியில் இருந்து வரும் பொதிகள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனதெரிவித்துள்ளார்.

கொழும்புக்குண்டுவெடிப்பை அடுத்து சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் வழங்கிய அறிவுரையைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பிரதம தபால் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**12-04-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1631


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-2317, 26-1542, 26-9658, 27-6404, 40-9085, 28-6748, 42-5608, 41-9396, 43-7563, 24-4726, 27-6121, 42-2355, 24 4636, 40-4760, 26-6745, 28-3476, 26-6525, 24-4560, 28-0427, 27-7711, 42-999, 26-3667, 41-8155, 26-2125, 40 3935.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-2297, 26-9140, 28-3010, 26-2421, 41-3617, 26-1461, 27-5907, 26-7353, 41-0976, 28-9567, 41-4487.

PUBLIC LIBRARY
JAFFNA.



உ
சிவமயம்

## சைவப்புலவர்மணி

செந்தமிழையும், சிவ நெறியையும், சமய சமரசத்தையும் வளர்க்கும் சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா அவர்களின் 75 ஆவது ஜெனன தினத்தை முன்னிட்டு மெய்கண்டதேவர் ஆதீனம் 15-04-94 அன்று சைவப்புலவர்மணிப் பட்டமளித்துப் பாராட்டுகின்றது (8016)

## எங்கினிக் காண்போம்?
## எவர் இனிப் புன்னகைப்பார்?



மலர்வு:
05-10-1990

உதிர்வு:
14-03-1994

### செல்வி மாதுரி வசந்தராசா

சின்ன வயது மகள்
சிரித்த முகம் பெற்ற மகள்
அன்னைக் குணம் படைத்த
அழகு மாது சென்றாளே!
கன்னல் மொழி எங்கே?
கருணை விழி தானெங்கே?
முதிர்ந்த கிழமில்லையே!
மூச்சடங்கும் வயதிலையே!
உதிர்ந்த மரமிலையே!
உலர்ந்துவிட்ட கொடியிலையே!
விழுது விட வந்த மகள்
விழுந்து விட்டாள் சாவினிலே
அழுதால் வருவாளோ?
ஆற்றுவதால் கிடைப்பாளோ?

14-03-94-ந் திகதி இறையடி சேர்ந்த எமது அன்புச் செல்வம் வசந்தராசா மாதுரி அவர்களின் ஈமக்கிரியையில் பங்குபற்றி உதவி புரிந்த உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்; 13-4-94-ம் திகதி புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கின்ற அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

தற்போதைய முகவரி: கண்ணீருடன்
சி. வசந்தராசா 6011, தந்தை, தாய், அண்ணன்மார்,

## ஒன்று கூடல்

புதிய உயர் கல்லூரியின் G. A. Q. 94 பிரிவு பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களின்

**ஒன்று கூடல் வைபவம்**

இடம்: O. L. R. தேவாலய மண்டபம்
(ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
காலம்: 13-4-94 (புதன்) காலை 11 மணி

பிரதம விருந்தினர்கள்:
**கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்**
(தலைவர் தமிழ்த்துறை - யாழ். பல்கலைக்கழகம்)
**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**

சிறப்பு விருந்தினர்கள்:
**பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள்**
**வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா அவர்கள்**

அன்றைய நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சி
**மென்பந்து கிரிக்கெற் போட்டி**

இடம்: O.L.R. மைதானம் மாலை 3-30 மணிக்கு

**G. A. Q. 94 மாணவர்கள்** எதிர் **விரிவுரையாளர்கள்**

தலைவர்:
திரு. ரவி

தலைவர்:
என். குழந்தைவேலு

கிரிக்கெற் போட்டி நிகழ்ச்சிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
G.A.Q. 94 பேராதனை மாணவர்கள்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி 9144)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
22.5.1973

தமிழீழ மண்ணில்:
13.04.1993

2-ம் லெப். சங்கிலி

## மரண அறிவித்தல்
### S. B. ஐயர்

முன்னாள் இலங்கை விமானப்படை அதிகாரியும், ஊர்காவற்துறை பிரஜைகள் குழு தலைவரும், ஊர்காவற்துறை ஓய்வூதிய சங்கத் தலைவருமான காரம்பனை வதிப்பிடமாக கொண்ட சோமசுந்தர குருக்கள் பாலசுப்பிரமணிய ஐயர் கொழும்பில் காலமானார். இவர் ஜெயலெட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும் சோமசுந்தர ஐயர் (றபா வீடியோ சென்ரர் கொழும்பு), வாசுதேவ ஐயர் (டென்மார்க்), மஞ்சுளா ஆகியோரின் தந்தையும் கை. இராஜேஸ்வரக் குருக்கள் (முதன்மை ஆசிரியர் வேலணை கல்விக் கோட்டம்), நளினி (கொழும்பு), வசந்தி (டென்மார்க்), ஆகியோரின் மாமனாரும் லவந்திகா, லயவர்ஜிதா, லதாஞ்சிதா, கம்சா, அர்பணா, வத்சலா ஆகியோரின் பேரனும் நயினை ஐ. கைலாசநாதக் குருக்களின் சம்பந்தியும் ஆவார்; ஈமக்கிரியைகள் 13-4-94 இன்று அன்னாரின் 89, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13 இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
கை. இராஜேஸ்வரக்குருக்கள்
(மருமகன்)

22, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9148)


## எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

# தினேஷ் வெதுப்பகம்
மானிப்பாய்

**உயர்ந்த தரம் சுவை நிறைந்த**
**தினேஷ் வெதுப்புணவுகள்**

**ஆதரவாளர்களே!**

உங்களது தேவைகளை நிறைவு செய்துகொள்ள, உங்களுக்கு அருகிலுள்ள எமது விற்பனை முகவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

**சிறி ராம் அங்காடி**
சந்தைச் சதுக்கம்,
சுழிபுரம்.

**யேசுதாஸ் அங்காடி**
4ஆம் கட்டை,


## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

பூநகரி - சொலி படகு பயணத்தின்போது பயணிகளால் தவற விடப்பட்ட சில முக்கிய பொருட்கள் பூநகரி நல்லூரில் உள்ள பயணிகள் படகுச்சேவை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த இராமச்சந்திரன் பிறேமானந் என்பவரின் நீல நிற பயணிகள் பை அடையாள அட்டை கடவுச் சீட்டு உட்பட மற்றும் சில பொருட்களும் மானிப்பாயைச் சேர்ந்த சந்தன் குணப்பிரியன் என்பவரது கடவுச் சீட்டு மற்றும் முப்பதாயிரம் ரூபாவிற்கான சரசோலை, பணப்பை என்பனவையும் பூநகரிநல்லூர் பயணிகள் படகுச் சேவையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது; உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது;

## சிசுவின் சடலம் கிணற்றில் மீட்பு

(மல்லாகம்)

அநாதரவான நிலையில் சிசுவொன்றின் சடலமொன்று ஊரெழு கிழக்கிலுள்ள கிணறொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அழுகிய நிலையில் உரப்பையொன்றில் துணியினால் சுற்றப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட இச் சடலம் சுன்னாகம் காவல்துறையினரால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக புலன்விசாரணையை மேற் கொண்ட காவல்துறையினர் அவ்விடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை விசாரணைக்கென தடுத்து வைத்துள்ளனர்; (09)

## புலிகளின் குரல்
### நிகழ்ச்சி நிரல்

1994-04-13 புதன் இரவு

8.01 ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''படும்மீன்கள் அழுதன''
8 10ற்கு - தாயகப்பாடல்கள்
8-20ற்கு - ஏர் முனை - நிகழ்ச்சியில் - 'நாங்களும் தயாராகுகின்றோம்' குறு நாடகம்
8 30ற்கு - செய்திகள்.
8.40ற்கு - நாடகம் - 'உணர்வுகள்''

1994-04 14வியாழன்காலை

7.02ற்கு-மாவீர வணக்கம்
7.15 ற்கு - அன்னை பூபதி

தற்போதைய முகவரி:
சி. வசந்தராசா 60/1,
கொழும்புத்துறை றோட்,
பாண்டியன் தாழ்வு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கண்ணீருடன்
தந்தை, தாய், அண்ணன்மார்,
அக்கா, உற்றார்,
உறவினர், நண்பர்கள்,
ஆசிரியர்.

(சி-9100)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
30 - 11 - 1931

மறைவு
28 - 02 - 1994

### அமரர் ஆறுமுகம் செல்லையா

பிரியமுள்ள ஐயா!
நீ, என்னைவிட்டுப் பிரிந்து 45 நாள் ஆனது
இந்த சோகத்தை எப்படி சொல்லலாம்
சின்னப்பிள்ளை நான், சிறுகுறும்பு செய்த வேளை
வெல்லாம்
கட்டியணைத்து உணவளித்த உன் கரங்கள் எங்கே?
ஆது, ஆதென்றென்னை ஆசையோடு அழைத்த
உன் வார்த்தைகள் எங்கே?
இடம் பெயர்ந்த அவலங்களை என்னுள் பதியவிடாத
உன் உறுதிதான் எங்கே?
ஐயோ, உனக்கா ஹெலி அரக்கன் எமனாக வந்தான்
நினைக்க நெஞ்சம் கருகிச் சாகிறது.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(8015)

பிரியமுள்ள பேரன்
ஆதவன்

## 2-ம் லெப். சங்கிலி

### [அப்புத்துரை உதயதாசன்]

தடை உடைத்து தமிழ் வாழவை என்று
விடை கொடுத் தனுப்பினாள் வீரத்தாய்
சிங்களப் படை சிதற ஓட
செங்களமாடி மங்காப் புகழ் கொண்டாய்
மாவீரா உன்பெயர் தொடர் சங்கிலி.

- குடும்பத்தினர்

ஈவினை தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(சி-9098)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
06 - 09 - 1950

விண்ணில்
14 - 03 - 1994



### திருமதி
### கமலாதேவி கிருஸ்ணபிள்ளை

அருளமுதே அம்மாவே! ஆசையுடன் எமைப்புரந்த
திருமகளே தீஞ்சுவையே! தித்திப்பே - உருவிழ
வைத்தாயே தாயேவல் எமனின் வாய்பட்டு
முத்தான வாழ்விழந்தாயோ...?

- நீங்காத நினைவுகள் சுமந்து - அம்மா
உன் ஆத்ம சாந்திக்கு அஞ்சலிக்கிறோம்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(8012)

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை,

"றட்ணம்ஸ்" சிற்றுண்டிச்சாலை
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.

"யாழமுதம்" சிற்றுண்டிச்சாலை
யாழ்ப்பாணம்.

"வானவில்"
யாழ்ப்பாணம்.

"விஸ்கம்" கூல்பார்
மானிப்பாய்.

(சி-9146)

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி
நிதிக்கான

## "ராசி சில்க்ஸ்"

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும்
உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 13 - 04 - 94
நேரம்:- பி. ப. 7.00 மணி

சிறப்பு விருந்தினர்:- வே. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)

பங்குபற்றும் அணிகள்:
(1) விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர்
திருமலை நட்சேத்திரம் விளையாட்டுக் கழகம்
(2) சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர்
டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்

பிரவேசம் ரூபா 25.00
சிறுவர்களுக்கு மட்டும் 10.00

★ பந்து விளையாட்டை ரசிப்பதுடன்
சிந்தைக்கினிய சிறார்களுக்கும் உதவுங்கள்

(சி-9041)

7.02ற்கு-மாவீரர் வணக்கம்
7.15 ற்கு - அன்னை பூபதி
நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
"எங்கள் மனங்களில் என்
றும் அன்னை பூபதி"
7.25 ற்கு - விடுதலைக்
கீதங்கள்
7.45 ற்கு - செய்திகள்
7.50 ற்கு - பத்திரிகைச்
செய்திகள்
7-55 ற்கு- தாயகப்பாடல்
என்பன இடம் பெறும்.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

### வீரவேங்கை
### நளினி

(சின்னத்தம்பி
புவனேஸ்வரி)

பிறப்பு: 04- 09- 1971
வீரச்சாவு: 19-03-1991
திதி: 13- 04- 1994

பள்ளிப் பருவத்திலே
பாசறையைத் தேடி
தம்பியின் தானையிலே
தன்னிகரில்லா
வீரத்துடன் வீறுநடை
போட்டு - நீ
வித்தாக வீழ்ந்தாலும்-உன்
இலட்சியக் கனவுகள்
- விருட்சங்களாய்
எழும் நாள்
வெகு தூரத்திலில்லை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

மீசாலை வடக்கு,
நுணுவில் வீதி,
கொடிகாமம்.

(8024)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.